குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.18/2022

எ.ம.சா.1

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் தேதி வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதாசிவம் | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 3.21 மணி,

Complainant Sadhasivam present. Advocate Mr.G. Karunakaran present for Complainant. Accused present. Advocate Mr.M. Palanisamy present for accused.

**குறுக்கு விசாரணை**

1) கடந்த 20 வருடங்களாக நான் காபி பார் தொழில் செய்து வருகிறேன். காபி பார் என்றால் என்னென்ன பொருட்கள் வைத்திருக்கிறேன் என்றால் டீ பிஸ்கட் கேக் போன்றவற்றை விற்பனைக்காக வைத்துள்ளேன் . சாமி காபி பார் தொடங்கி 20 வருடம் ஆகின்றது என்றால் சரிதான் . தனிநபராக ஆரம்பித்தேனா அல்லது பங்குதாரருடன் ஆரம்பித்தேனா என்றால் தனிப்பட்ட முறையில் தான் காபி பார் தொடங்கினேன் மேற்சொன்ன கடையின் மூலம் எனக்கு மாதம் 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை லாபம் கிடைக்கும் . எனது கடையில் மொத்தம் நான்கு நபர்கள் பணிபுரிகிறார்கள் . ஆளுக்கு முப்பதாயிரம் வரை நான்கு நபர்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் சம்பளம் கொடுக்கிறேன் . தினமும் மூலப்பொருட்களின் செலவு மட்டும் எவ்வளவு இருக்கும் என்றால் 20000 முதல் சில சமயங்களில் 40 ஆயிரம் வரை இருக்கும் . நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை..

2) எதிரி வெங்கட்ரமணி கவுன்சிலர் பிரபுவின் மூலம் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. நான் எதிரி வெங்கட்ரமணி கவுன்சிலர் பிரபு ஆகியோர் கொங்கு இளைஞர் பேரவை என்ற கட்சியில் இருந்தோம் என்றால் சரிதான். கட்சியின் அடிப்படையில் தான் எதிரியை எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல கடையின் மூலம் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கு காசோலையில் இருக்கும் கையொப்பம் செய்திருக்கும் பேனாவும் விவரங்கள் பூர்த்தி செய்திருக்கும் பேனாவும் வெவ்வேறான பேனாவினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி தன்னுடைய காசோலை தொலைந்து விட்டதாக வங்கிக்கு ஸ்டாப் பேமெண்ட் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . எதிரி காவல் கண்காணிப்பாளருக்கு காசோலை தொலைந்து விட்டதாக புகார் அளித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு காசோலை எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்றாலும் பிரபு என்னிடம் எடுத்து கொடுத்து விட்டார் என்றாலும் சரி அல்ல .

விசாரணை முடிந்த நேரம் மதியம் 3.35 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur